# சிந்தனையாளர்களின் சரணாலயம் அண்ணன் முரசொலி செல்வம்



முரசொலி என்கின்ற ஒற்றை வார்த்தையை, ஏதோ ஒரு தனி மனிதனின் பெருமையையோ, ஒரு ஜாதியின் பெருமையையோ சுட்டும் பெயர் அல்ல.. மாறாக, ஒரு இனத்தின் பெருமையை, ஒரு மொழியின் சிறப்பை, ஒரு மண்ணின் கலாச்சாரத்தை, ஏறத்தாழ 80 ஆண்டுகள் பதிவு செய்து இந்த தமிழ் இனத்தின் போர்க்குணத்தை பறைசாற்றும் வரலாற்று ஆவணம்.

இந்த பெயரைத் தன் பெயருக்கு முன்னால் முன்னொட்டு பெயராக இட்டுக்கொண்ட இரு பெரும் ஆளுமைகள் மறைந்த அண்ணன்கள் முரசொலி செல்வம் மற்றும் முரசொலி மாறன் ஆகிய இருவர். பலபேர் முரசொலியை தன் பெயரோடு சேர்த்துக் கொண்டார்கள். அது அவர்களுக்கு தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள உதவியிருக்கலாம். ஆனால் அண்ணன்களுக்கு அப்படி இல்லை. இவர்களால் முரசொலி அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது. எப்படி என்றால், கடந்த 2001 இல், நவம்பர் மாதம் 9 முதல் 13ஆம் தேதி வரை கத்தார் நாட்டில் தோகா நகரில் உலக வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டு, அன்றைய வர்த்தக அமைச்சர் முரசொலி மாறன் முன்மொழிந்த இரண்டு தீர்மானங்கள், அந்த மாநாட்டில் கலந்து கொண்ட 142 நாடுகள் மட்டுமல்ல, உலக நாடுகளே உயர்வாக கருதிய அந்த தருணத்தில் முரசொலி என்பது சிந்தனையாளர்களின் உறைவிடம் என்பதை உலகுக்கு உணர்த்தியது.

உலகம் போற்றும் உன்னதமான தீர்மானங்களை தந்த ஆகச்சிறந்த சிந்தனையாளர் ஆசிரியராக இருக்கும் பத்திரிகைதான் முரசொலி என்று குதூகலித்தது ... அதே போன்று தமிழக அரசியல் வரலாற்றில் 21/9/1992 என்ற நாளை எவரும் எளிதில் கடந்து விட முடியாது. தமிழக சட்டமன்றத்தில் அது வரைக்கும், நடந்திராத இனிமேலும் நடந்தேற முடியாத கொடுமை ஒன்று நடந்தது. ஆம் ஜெயலலிதா ஆட்சியில் அன்றைய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்... மறைந்த பருதி இளம்வழுதி வீட்டு வசதி வாரியத்தின் முறைகேடு குறித்து 9/9/1992 காலை நடந்த விவாதத்தில் பேசிய கருத்துக்களை முரசொலி பதிவு செய்து, மதியம் 2:30 மணிக்கு முன்னால் வெளியூர் பத்திரிகைகளில் அனுப்பிவிட்டது. அன்று மாலை, சபாநாயகர் அவைக் குறிப்பில் இருந்து அதை அகற்றி விட்டார். எனவே, அன்றைய முரசொலி ஆசிரியர் அண்ணன் முரசொலி செல்வத்தின் மீது உரிமை மீறல் பிரச்சினை கொணர்ந்து, சட்டமன்ற உரிமைக்குழு அவருக்கு அழைப்பாணை அனுப்பியது. நேரில் சந்தித்து விவரம் கொடுத்தார். முரசொலி மட்டுமல்ல, அன்று மாலை வந்திருந்த பல பத்திரிகைகளிலும் வந்திருந்ததை ஆதாரத்தோடு எடுத்துக்காட்டினார்.

முரசொலியின் அன்றைய மாலைப் பதிப்பில் அது இல்லை என்பதையும் எடுத்துச் சொன்னார். தண்டிக்க வேண்டும் என்ற முடிவில் இருந்த ஜெயலலிதா அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் பிறகு மன்னிப்பு கேட்டால் விட்டுவிடுவதாகவும், இல்லை எனில், 21.9.1992 சட்டமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றனர். மன்னிப்பு கேட்கும் பரம்பரையில் வந்தவனல்ல நான். எனவே நடப்பது நடக்கட்டும் என்றார் அண்ணன். தலைவர் கலைஞரிடம் ஆலோசித்தார். கருப்பு சட்டை அணிந்து சட்டமன்றம் போக சொன்னார் தலைவர். கருப்பு பேன்ட், சட்டை அணிந்து சட்டமன்றம் சென்று அங்கு தயார் செய்து வைத்திருந்த கூண்டில் ஏறினார். மன்னிப்பு கேட்க சொன்னார் சபாநாயகர் முடியாது என்றார் அண்ணன் முரசொலி செல்வம், நீங்கள் போகலாம் என்றார். அதிகாரத்திற்கு அடிபணியாத கொள்கை தீரர்களின் கூடம் முரசொலி என்பது நிரூபிக்கப்பட்டது. இப்பொழுதும் இப்பேர்ப்பட்ட ஒரு சிந்தனையாளரை, கொள்கை தீரரை ஆசிரியராக கொண்டு இருப்பதுதான் முரசொலி...என்று தனக்கு வலிமை சேர்த்துக் கொள்கிறது முரசொலி.

நான் முரசொலி மாறன் அண்ணனோடு பேசிப் பழகியதில்லை (மூத்த தலைவர்கள் அவரைப்பற்றி சொல்லும் போது அறிவாளிகளை அடையாளம் கண்டு தட்டிக் கொடுத்து வளர்ப்பதில் அவருக்கு நிகர் அவர்தான் என்று கூறியுள்ளனர் ). ஆனால், கடந்த எட்டு ஆண்டுகளாக அண்ணன் முரசொலி செல்வம் அவர்களுடன் நேரிலும் அலைபேசியிலும் அடிக்கடி பேசிக் கொள்வதுண்டு. நமது கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்ளும் விவாதங்கள் குறித்தும், நேர்காணல் குறித்தும், விவாதித்திருக்கிறார். கருத்துரைகள் வழங்கி இருக்கிறார். சில நேரங்களில், எங்களுக்குள்ளேயே விவாதங்கள் நடந்ததுமுண்டு. குறிப்பாக, நமது கழக தலைவர் அவர்கள், 'THE RISING SUN' ஆசிரியர் பொறுப்பைத் தந்தவுடன் முரசொலி செல்வம் அண்ணாவை கோபாலபுரம் இல்லத்தில் தனியாக சந்தித்து அறிவுரைகள் கேட்டேன். பத்திரிகைத் தர்மத்தையும், அதன் நெறிமுறைகளையும் சொல்லித் தந்தார். ரத்தின சுருக்கமாக அவர் சொன்னது: உறுதிப்படுத்தி ஊர்ஜிதம் ஆகாத எந்த செய்தியையும் வெளியிடாதீர்கள். நீதிமன்றத்தில் சந்தேகத்தை குற்றவாளிக்கு சாதகமாக பயன்படுத்துவது போல் நமக்கு ஒரு நிகழ்வு நூறு சதவிகிதம் சந்தேகமின்றி இருந்தால் அன்றி அந்த நிகழ்வு நடக்கவில்லை என்றுதான் கருதவேண்டும்... என்ற உன்னதமான நெறிமுறையை உணர்த்தியவர் அண்ணன்தான். உள்ள படியே ஒரு குருவின் இடத்தில் இருந்து வழி நடத்தியவர்.



**பேராசிரியர்**
**கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்**
*கழக செய்தித் தொடர்புச் செயலாளர்*

சிலந்தி என்ற பெயரில் அவர் எழுதியவற்றில் சில நேரங்களில் தந்தை பெரியாரின் உக்கிரம் தெரியும்.. பல நேரங்களில் பேரறிஞர் அண்ணாவின் அறிவுக் கூர்மை மிளிரும்.. நிறைய நேரங்களில் தலைவர் கலைஞரின் எதுகை மோனையுடன் கூடிய எள்ளல் துள்ளி விளையாடும் பொதுவாக அவருக்கே உரிய நகைச்சுவை நடனமாடும்... முரசொலியில் அவர் தந்த வரலாற்று சான்றுகள் ஆரிய கூத்தாடிகள் சொல்லும் பொய்களுக்கு தக்க தரவுகளைத் தந்து உடனடிப் பதிலுரைகள் என்று சனாதன எதிர்ப்பு வாள் சுழற்றிய உக்கிர பொழுதுகளில் அவரோடு ஆவலாக உரையாடியுள்ளேன். திராவிட தத்துவார்த்த விவாதத்தினூடே அந்த கருத்து குறித்து அவரோடு அளவளாவிய நபர்களையும் அவரவர் பார்வைகளையும் பகிர்ந்து கொண்டார். அப்படி அவர் சொன்ன பேர்கள் பெரும்பாலும் திராவிட சித்தாந்தத்தில் நேற்றைய, இன்றைய, நாளைய சிந்தனையாளர்கள்தான் இருந்தார்கள். அப்போது தான் புரிந்தது அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள், சமகால சிந்தனையாளர்களின் சரணாலயம் என்று, இனி இவர் போல் கிடைக்குமா?, ஆட்சி அதிகாரத்தில், கட்சி நிர்வாகத்தில் தான் என்ன நினைத்தாலும் எப்படி வேண்டுமானாலும் செய்ய முடியும் என்ற நிலையிலும் எந்த அதிகார தொனியும், இல்லாத எளிமையான மனிதராய், எல்லோரையும் அரவணைக்கக் கூடிய தாயுள்ளம் கொண்ட, தமையனாய், தந்தை பெரியாரிடம், பேரறிஞர் அண்ணாவிடம், முத்தமிழறிஞர் கலைஞரிடம் பாடம் படித்து, அனுபவத்தால் தான் பெற்ற உலக ஞானத்தையும், ஒன்றிணைத்து தலைக்கணமே இல்லாமல், என் போன்ற பிள்ளைகளுக்கு ஞான குருவாக அண்ணன் முரசொலி செல்வத்தை போல் இனி ஒருவர் இந்த மண்ணில் கிடையாது அவரைப் போல் ஒருவரை படைத்திட இயற்கையே நினைத்தாலும் உறுதியாக அதுவும் தோற்றுத்தான் போகும்....

பின்புலம் இல்லாத ஓவியம் போல் தனித்து நிற்கும் தவிப்புதான் மேலோங்கி நிற்கிறது...

ஏன் அண்ணா இப்படி செய்தாய்.....



கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள கூடலூர் நகராட்சியில் ரூ.1.60 கோடியிலான வளர்ச்சி பணிகளை நீலகிரி தொகுதி எம்.பி. ஆ.ராசா தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்த அவருக்கு வீரபாண்டி பிரிவில் கூடலூர் நகர தி.மு.க சார்பில் வரவேற்பு கொடுக்கப்பட்டது. இதை தொடர்ந்து 15 வது வார்டு பேராசிரியர் காலனியில் ரூபாய் ஒரு கோடியே 20 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட உள்ள சமுதாய கூடத்தின் பணியை தொடங்கிவைத்தார். அதன்பின் 14வது வார்டு லட்சுமி நகரில் ரூ.41 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய பூங்காவை ஆ.இராசா எம்.பி ரிப்பன் வெட்டி திறந்துவைத்தார்.நகராட்சி தலைவர் மற்றும் நகர செயலாளர் அ.அறிவரசு தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் டி ஆர் சண்முகசுந்தரம், மாவட்டம் மாணவர் அணி அமைப்பாளர் அந்தோணி ராஜ், ஆணையாளர் மனோகரன், துணை தலைவர் ரதிராஜேந்திரன்,பொறியாளர் சோமசுந்தரம், தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் சண்முகசுந்தரம், நகர்மன்ற உறுப்பினர்கள் ஜானகி. சாந்தாமணி, ரேவதி, ரம்யா, மணிமேகலை, சித்ரா, ரேகா, பாலசுப்ர மணியன், முருகானந்தம், மாடசாமி, துறை செந்தில்கு மார், அகில் சந்திரசேகரன், முருகேசன், கீர்த்தனா, நகர நிர்வாகிகள் செல்வி, வீரபாண்டி செயலாளர் சுரேஷ்குமார், சோமையம்பாளையம் ஆனந்தகுமார், விக்னேஷ்வரன், வக்கீல்கள் பிரபு, சசி, வழக்கறிஞர் சந்தானம், அப்பாஸ், ஐ.டி. உதயகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### 1964-ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரை

## இந்தியாவை உலுக்கிய மிக மோசமான ரயில் விபத்துகள்!

### பயணிகள் உயிரை அலட்சியமாக நினைக்கும் ரயில்வே துறை!

*சென்னை, அக்.14-*

*இந்தியாவில் கடந்த 1964ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரை ரயில் விபத்தில் மட்டும் ரயில்வே நிர்வாகம் அளித்த தகவலின் அடிப்படையில் 2393 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.*

*இந்தியாவில் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ரயில்வே துறை சமீபகாலமாக விபத்துகள் என்பது அதிகரித்து வருகின்றன. இதற்கான காரணங்கள் பல இருந்தாலும், விபத்தில் பாதிக்கப்படுவது பயணிகளின் - குடும்பங்களாக தான் உள்ளன.*

*அந்தவகையில் கடந்த 60 ஆண்டுகளாக நடந்த ரயில் விபத்துகளின் விவரம் பின் வருமாறு:*

*1964ம் ஆண்டு ராமேஸ்வரம் பகுதியில் வீசிய புயலால் பாம்பன் பாலம் அடித்துச் செல் லப்பட்டதில் அதன் மீது சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் கடலில் விழுந்து 120 பேர் உயிரிழந்தனர்.*

*1981ம் ஆண்டு பீகா ரில் நடந்த ரயில் விபத்து இந்தியாவின் மிகமோச மான விபத்தாக பார்க்கப்படுகிறது. பாக்மதி ஆற்றுப்பாலத்தில் சென்று கொண்டிருந்த ரயில் தடம் புரண்டு ஆற்றில் விழுந்த தில் ஏராளமானோர் உயிரிழந்தனர். 286 உடல்கள் மட்டும் மீட்கப்பட்டாலும் 800 பேர் வரை இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.*

*1995ம் ஆண்டு ஆகஸ்ட் 20ம் தேதி : உத்தரப்பிரதேசத்தின் ஃபிரோசா பாத்தில் பழுதாகி நின்று கொண்டிருந்த எக்ஸ்பி ரஸ் ரயில் மீது பின்னால் வந்த மற்றொரு எக்ஸ்பிரஸ் ரயில் மோதியதில் 358 பயணிகள் உயிரிழந்தனர்.*

*1998ம் ஆண்டு நவம் பர் 26ம் தேதி பஞ்சாப்பில் நேரிட்ட விபத்தில் 212 பேர் இறந்தனர். தடம் புரண்டு நின்ற ரயில் மீது விரைவு ரயில் மோதிய தால் இந்த விபத்து நிகழ்ந்தது.*

*1999ம் ஆண்டுஆகஸ்ட் 2ம் தேதி மேற்கு வங்காளத்தில் பிரம்மபுத்ரா மெயிலும் அவத்*

*அசாம் எக்ஸ்பிரஸ் ரயிலும் நேருக்கு நேர் மோதியதில் சுமார் 300 பயணிகள் உயிரிழந்தனர்.*

*2002ம் ஆண்டு செப்டம்பர் மாதம்: பீகார் மாநிலத்தில் தாவே நதி அருகே ஹௌரா ராஜ் தானி விரைவு ரயில் தடம் புரண்ட விபத்தில் சுமார் 130 பேர் உயிரிழந்ததாக ரயில்வே தெரிவித்தது.*

*2010ம் ஆண்டு மே மாதம் : மேற்கு வங்கத்தில் சரக்கு ரயிலும் விரைவு ரயிலும் மோதிக்கொண்ட விபத்தில் 148 பயணிகள் உயிரிழந்தனர்.*

*2023ம் ஆண்டு ஜூன் 2ம் தேதி : ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில், கோரமண்டல் விரைவு ரயில், பஹானாகா பஜார் நிலையம் அருகே இரவு 7 மணி அளவில் விபத் துக்குள்ளானது. இதில் 20க்கும் மேற்பட்ட பெட் டிகள் தடம் புரண்டன. இந்த விபத்தில் 296 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்திற் கும்அதிகமானோர் காயம் அடைந்தனர்.*

*2023ம் ஆண்டு அக். 29ம் தேதி : ஆந்திரப் பிரதேச மாநிலம், விஜயநக ரம் மாவட்டத்தில், கொத் தவலசா சந்திப்பு ரயில் நிலையம் அருகே, விசா கப்பட்டினம்-பலாசா பயணிகள் ரயில் மோதிய தில், விசாகப் பட்டினம்- ராயகடா பயணிகள் ரயில் தடம் புரண்டது. 14 பேர் உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்தனர்.*

*2024ம் ஆண்டு ஜூன் 17ம் தேதி : மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டத்தில் உள்ள நியூ ஜல்பைகுரி அருகே சரக்கு ரயிலும், விரைவு ரயிலும் மோதிக் கொண்ட விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர். பலரும் காயமடைந்தனர்.*

*இந்தநிலையில் நேற்றைய தினம், கர்நாடக மாநிலம் மைசூரில் இருந்து பீகார் மாநிலம் தர்பங்காவுக்கு பாக்மதி விரைவு ரயில் திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டை அருகே வந்து கொண்டிருந்த போது, அங்கு ஏற்கெனவே நின்றுகொண்டிருந்த சரக்கு ரெயிலின் பின்னால் வேகமாக வந்து மோதி விபத்துகுள்ளாகியது. இதில், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.*



நாகை மாவட்டம் கீழையூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திருக்குவளை கடை தெருவில் மறைந்த மூத்த பத்திரிக்கையாளரும் சிறந்த எழுத்தாளருமான முரசொலி செல்வம் அவர்களின் திருஉருவப்படத்திற்கு ஒன்றிய கழக செயலாளர் சோ.பா. மலர்வண்ணன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள். உடன் நிர்வாகிகள் பி.தியாகராஜன், குவளை கணேசன், சண்முகம்,ஒன்றிய குழு உறுப்பினர் சுதா அருணகிரி மற்றும் பாஸ்கர்.பந்தல் தியாகராஜன், கார்த்தி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில்

## அக்.26 மாநில அளவிலான இறுதிப் போட்டி!

### வாகை சந்திரசேகர் வேண்டுகோள்!

*சென்னை, அக்.14-*

*கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கை வருமாறு :-*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கழகம் சிறந்த முறையில் கொண்டாடி வருகிறது. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் தலைமையால் கொடுக்கப்பட்டுள்ள கலைஞரின் பாடல்கள், வசனங்கள் ஒப்புவித்தல் போட்டிகள் மாவட்டம் தோறும் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. நிறைவாக மாநில அளவில் சிறந்த விருதா ளர்கள் மூவரை தேர்ந்தெடுத்து கழகத் தலைவர் அவர்களின் திருக்கரங்களால் பரிசளிக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.*

*எனவே, மாவட்டம் தோறும் நடைபெறும் போட்டிகளை மாவட்ட அமைப்பாளர்கள் விரைவில் நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.*

*அக்டோபர் 26ஆம் தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில், மாநில அளவிலான இறுதிப் போட்டி நடைபெற உள்ளது.*

*மாவட்ட அளவில் சிறந்த மாணவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அக்டோபர் 26ஆம் தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.*

*இவ்வாறு வாகை சந்திரசேகர் கேட்டுக் கொண்டுள்ளார்.*

### அனைத்து நிர்வாகிகளும் மகளிர் அணி உறுப்பினர்

## படிவங்களை அறிவாலயத்தில் ஒப்படைத்திடுவீர்!

### ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.இராணி அறிக்கை!

*சென்னை, அக்.14-*

*மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அந்தந்த மாவட்டங்களில் புதியதாக சேர்க்கப்பட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி உறுப்பினர் படிவங்களை அறிவாலயத்தில் ஒப்படைக்கும்படி கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.*

*அவர்களது அறிக்கை வருமாறு:-*

*உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகளின் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் பத்தாயிரம் புதிய மகளிர் அணி உறுப்பினர்கள் சேர்க்க மகளிர் அணி பொறுப்பாளர், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் ஆலோசனை பேரில் மாநில மகளிர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.*

*மகளிர் அணி உறுப்பினர்கள் சேர்க்கை பணி கடந்த ஓராண்டுகளாக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகளால் நடைபெற்று வருகிறது. நூற்றாண்டு விழா நிறைவு அடைவதால் (25/10/2024) அக்டோபர் மாதம் 25-ஆம் தேதிக்குள் அனைத்து நிர்வாகிகளும் புதிதாக சேர்க்கப்பட்ட மகளிர் அணி உறுப்பினர்கள் படிவங்களை அறிவாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.*

*இவ்வாறு மாநில மகளிரணிச் செயலாளர் ஜெ. ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப. இராணி ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**அம்பத்தூர் பா. இரவைக்கண்ணன்**
**அக்டோபர் 14 (1992)**



**அம்பத்தூர் நகரக் கழகத்தின் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார். மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு! கொள்கையில் உறுதி! குறிக்கோளுக்காக தியாகம் செய்யும் இயல்பு! என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**